# மானுடம்

சிற்றிதழ் - 3



ஆசிரியர்
திருமலை சுந்தா

10/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியம் என்பது உண்மை பேசுவது மாத்திரம் அல்ல உள்ளத்திலும் உண்மையோடிருப்பது.

- காந்திஜி -

அட்டைப்படம் : சிசு



நேர்மை – பொறுமை
மானுட நேயம்


மானுடம்

172, பிரதான வீதி, திருக்கோணமலை

சிற்றிதழ் – 3
2009 – பங்குனி


இதழில்....


ஆசிரியரின்......... 2
எச்சரிக்கை...........3
மனிதம் சிரிக்கட்டும்........4
வாழ்க்கை.......4
நட்பு விருட்சம்.....5
சிரி... சிரி... சிந்தி...6
சொல்லத்தான் நினைக்கிறேன்...8
சமாதானத்தாயே.....9
நாவல் இலக்கியம்.....10


ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பு

# ஆசிரியரின்....

'மானுடம்' இரண்டு நாட்களுக்குள் விற்பனையாகி விடுகின்றது.

இது நாள் வரை எம்மால் தெரிந்திராத ஆனால் எம்மைத் தெரிந்த இலக்கிய ஆர்வலர்கள் நேரில் வாழ்த்துவது மகிழ்ச்சியாக இருக்கின்றது.

ஆக்கங்களின் வரவே மந்தமாக உள்ளது. பழையதுகளை புதியதாக்குவதும் மானுடத்தின் விருப்பங்களில் ஒன்று.

இன்னும் புதுப்புது அம்சங்கள் இனிவரும் மானுட பக்கங்களை அலங்கரிக்க இருக்கின்றன.

"ஆன்மீக சிற்றிதழ்" வெளியிடுமாறு பலர் கேட்கிறார்கள். மானுடத்தின் சகோதர சிற்றிதழாக அது வெளி வரலாம்? யோசிக்கின்றோம்.

நடக்க இருப்பவை நல்லவையாக இருக்கட்டும். வாசக நெஞ்சங்களோடு கை குலுக்கிக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எச்சரிக்கை

## பதுக்காதீர் - வதைக்காதீர்
## ஏழைகள் உடலைப் புதைக்காதீர்!

– திருக்கோணமலை கவிராயர் –

ஒசிப்பிழைப்பால் உடம்பை வளர்த்துவிட்ட
தூசிப்படையே தொலைந்தோடு – என் பூமி
ஏழைக்குத்தேன் – எந்தருக்குச் – சாவுமணி,
கோழைக்கு நல்ல செருப்பு

பிறநாட்டு உதவிகளைப் பதுக்கிக் கொண்ட
'பிற்பொக்கெட்' கள்ளர்களே உங்கள் நாமம்
வரமட்டும் காத்திருங்கள், வண்டவாளம்
அறுமட்டும் என் பேனா உறங்கிடாது

அரிசியுடன் அரசியலைச் சேர்த்துக் கொண்டும்
அசல் 'ரூப்பு' உதவிகளைச் செய்து கொண்டும்
கரிசனையாய் ஏதேதோ நடித்துக் கொண்டும்
வரிசையிலே திரிபவரே – எச்சரிக்கை.

உண்மையிலே வீடிழந்த ஏழைக்கூட்டம்
ஒரு சோற்றுப் பருக்கையின்றி ஏங்கி வாட
கண்கெட்ட மனிதர்களும் பணமுள்ளோரும்
கைகட்டி நின்றுதவி பெறுதல் நன்றோ

ஏழைகளின் உதவியினைத் தட்டிச்சுத்தி
எடுப்பான உடுப்புடனே தெருவில் போகும்
கோழைகளே நிறுத்துங்கள் புயலால் வாடும்
ஏழைகளின் நிவாரணத்தைப் பதுக்காதீர்கள்!

அரிசி, உடை, கருவாடு, உப்பிருந்து
அடுக்கிவைத்த பெருச்சாளிக்கூட்டத்தின் பேர்
வரிசையிலே நான்தருவேன் அஞ்சேன் அஞ்சேன்
வரப்போகும் பிரசுரத்தை எதிர்பார்ப்பீரே.......

### ஷண்முகம் சுப்பையா
கவிதைகள்

என் கடமை இங்கே
மிக அதிகம்
முடிந்தால் நீங்கள்
மானுடத்தை படியுங்கள்
என்னோடு வாருங்கள்
புதிய இலக்கு நோக்கி
பயணப்படுவோம்.
இல்லையெனில் அனைத்தையும்
மறந்து விடுங்கள்.

– அட்டைப்பட கவிதை –

********************

### இந்த பூமி

"உண்மைக்கு இங்கேது மதிப்பு
உத்தமர்க்கு இங்கே எதிர்ப்பு
பெண்மைக்கு இங்கே பழிப்பு
பேசாதோர்க் கிங்கே கழிப்பு
வன்மைக்கு இங்கே நடப்பு
வஞ்சகர்க்கு இங்கே செழிப்பு
வாழுமா இந் நாடு வளர்ந்து
வளருமா இப் பூமி தொடர்ந்து

சீ. என். துரைராஜா
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் சிரிக்கட்டும்

– மாறன் –

செல் அடியில்
கைகளிழந்தேன்
கால்களும் இழந்தேன்
போதாக் குறைக்கு
என் வயிற்று
சிசுவையும் இழந்தேன்
இனி என்னிடம்
என்ன இழப்பதற்கு
இந்த முண்ட குண்டு
உடல்தானே
வாரும் இதையும்
கொண்டு போங்கள்
நடுச் சந்தியில்
வேடிக்கை பொருளாக
காட்டுங்கள்.
மனிதம் சிரிக்கட்டும்
வாய் இருக்கின்றது
உங்களோடு சேர்ந்து
நானும் சிரிக்கின்றேன்

## உலகம்

அணைக்க ஒரு
அன்பில்லா மனைவி
வளர்க்க இரு நோயுற்ற சேய்கள்
வசிக்க சற்றும்
வசதியில்லா வீடு
உண்ண என்றும்
உருசியில்லா உணவு
பிழைக்க ஒரு
பிடிப்பில்லா தொழில்
எல்லா மாகியும்
ஏனோ.....
உலகம் கசக்கவில்லை.

– ஷண்முகம் சுப்பையா –

# வாழ்க்கை

பந்தல் கட்டி படர விட்டேன்
கொடியொன்றை நான்
அது படர்ந்து பந்தலிலிருந்து
காயொன்றை ஈன்றிட
ஆனந்தம் மேலிட்டு
வளைய வளைய வந்தேன்
அதைச் சுற்றி
வந்தததான் மிச்சம் எனும்படி
பந்தலையும்
படுத்ததொரு நாள்
அதை
எப்பாடு பட்டேனும் எடுத்து
நிறுத்திடலாம்
என்றாலோ எல்லாம்
ஒரே சிக்கல்
அதனால்
எப்படியோ போகட்டும்
என்றிப்போது என் பாட்டிற்கு
அதன் மூட்டில்
என்னால் முடிந்த மட்டும்
நீரை மட்டும் கொட்டுகிறேன்.

– ஷண்முகம் சுப்பையா –

## சீப்பு

சிக்கறுக்க
சிக்கறுக்க
பூமாதேவியின்
புனிதச் சிகையில்
மாதர் சிக்கறுத்தெறிந்த
கூந்தல் சுருள் போல்
சிக்கிற்கு மேல் சிக்கு

– ஷண்முகம் சுப்பையா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு விருட்சம்

கவிஞர் 'யாரோ'

- நட்பு பற்றி
உங்களுக்கு
ஏதாவது
தெரியுமா?

- பேசுதல் சுகமென
நீ நினைத்ததால்
என்னோடு பேசி
மகிழ்ந்த காலங்கள்
உன் வாழ்வுத்
துணையோடு இருந்த
காலங்களை விட
அதிகம்... அதிகம்

- தொலைபேசியில்
நீ பேசி பேசி
காசை இழுந்தது
நானல்ல நண்பா
நீ தானே...

- என்பேனா
முனை என்று
வெற்று காகிதத்தில்
உழுததோ அன்றே
அந்த சோற்று தரைதனில்
கால் பதித்தவன் நீயடா

- உன் கவிதை தமிழில்
அந்தஸ்து பார்த்திருந்தால்
என்னை நீ எப்போதோ
கழற்றி விட்டிருப்பாய்

- வந்த வெள்ளம்
எனை அள்ளிப்
போகாமல் அணை
போட்டவன் நீயே

- நட்பென்பது
குட்டையல்ல
ஆழ சமுத்திரம்
என்பாயே அடிக்கடி

- சூரியன் விழுந்தவுடன்
வருவாயே என்னிடம்
நான் உன்னைத்
தேடி வரவில்லையென
கடிந்தும் கொள்வாயே

- இருபது வயதினில்
காதலில் எரிந்தோமா?
கவிதையில் தானே
முழுதாய் எரிந்தோம்

- முதுமையிலும்...
முகம் வெறுத்து
எப்போவது
நாம்...
முரண்பட்டதுண்டா?

- நட்பென்பது
குட்டையல்ல
சமுத்திரம் தான்
நண்பனே!
ஏற்றுக் கொள்கின்றேன்.



- நட்பின் பிரிவுத்துயர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அந்த ஆக்கள் ஏன் இப்படி இப்படி சத்தம் போடுயினம்?
- கலியான வீட்டுச் சாப்பாடு முடிஞ்சு போச்சாம் என்று...

- மயூரி -



சிரி......

சிரி......

சிரி......

- அக்கரை சித்திரம்



- என்ன இவையளுக்க சண்டை கணநேரமாய்?
- மாப்பிள்ளையை எவை கடத்தினது என்று தான்

- இந்திரா -

சிரி......



சிரி......

- "விழுந்த பற்கள் எல்லாம் என் அப்பு"
- "என்ர முதுசம்மோனை இது"

- மனோ

சிரி......

சிரி......

தொகுப்பு - ஆலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரி......



சிரி......

- பல இடத்தில் பேசி பார்த்திட்டன் மகளுக்கு எந்த வரனும் சரிப்பட்டு வரவில்லையே.
- முதல்ல உங்கட சீர் உடையை மாத்துங்க.

–கோகுலன் –

சிரி......




- "மன்னர் அரண்மனையிலேயே வேட்டையாடுகிறாராமே?"
- ஆமாம் எலிப்பொறி வைத்து எலி பிடிக்கிறார்.

– ஜெயசந்திரன் –


- இக்கரை

சிரிப்பு



- மின் விசிறியை வேகமாக அழுத்தாதீங்க என்று சொன்னேனே
- கேட்டால் தானே...

– பழனிவேல் –



சிரி......

கடல் மீன் நீ. ஏன் குளத்துக்க வந்தே?
கடல் தண்ணியில உப்பு கூடிப்போச்சு???
உடம்புக்கு ஒத்துக்கலை....

– ஆனந்தன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சொல்லத்தான் நினைக்கிறேன்

1

– ப. மனோகரன் –

தங்களைக் கொல்லவோ தாக்கவோ வேறொரு மிருகம் வருகிறது என்று தெரிந்தவுடன் தங்கள் கூட்டத்திற்கு எச்சரிக்கை செய்யும் குணம் மான்களிலும், குரங்குகளிலும் உண்டு. மனிதர்களிடம் மட்டும்தான் இந்த மாதிரி நேரங்களில் மெத்தனமும் சுயநலமான 'சும்மா இருத்தலும்' அதிகம். எல்லா சமூகங்களிலும் பொருளாதார ரீதியில் மூன்று நிலைகளில் மக்கள் வாழ்கின்றார்கள். பணக்கார வர்க்கம், நடுத்தர வர்க்கம், ஏழை வர்க்கம் என்ற இம்மூன்று பிரிவுகளும் நாட்டு நடப்பைப் பற்றி ஒவ்வொரு விதமாகப் பார்க்கிறார்கள். மூன்று வர்க்கங்களுக்கும் உள்ள வெவ்வேறு காரணங்களால் நாட்டில் ஏற்படும் அபாயங்களை உடனடியாகக் கவனிக்க முடியாமல் போகிறது. இந்த வாய்ப்பை இவர்களது அலட்சியத்தை அல்லது அசிரத்தையை சமூக விரோதிகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நடுத்தர வர்க்கத்துக்கு எப்போதுமே மேல் வர்க்கம் போல் பணமும் வசதியும் சேர்ப்பதில் தான் நாட்டம். பணக்காரர்களாகவில்லையே என்ற விரக்தியும் இவர்களிடையே அதிகம்.

விளம்பரங்களைப் பார்த்து தவணை முறையில் பொருட்கள் சேர்த்து ஆடம்பரத்தை உருவாக்கிக் கொள்வதற்காகக் கடனை அதிகமாக்கிக் கொள்ளும் இக்கூட்டம் எளிதில் மத ஏமாற்றுக்காரர்களிடம் மாட்டிக் கொள்கிறது.

இவர்களுக்கு மதம் ஒரு தப்பித்தல். இலவச பொழுது போக்கு போல் சில குருமார் இவர்களைத்தான் முதலில் கவர்ந்திழுக்கிறார்கள். அவதாரங்களை நம்பும் இந்த பரிதாபங்கள் சுலபமாக மத வெறியர்களின் மயக்கும் பேச்சில் மயங்கிவிடுகின்றனர். இதுவும் சமூக விரோதிகள் சமுதாயத்தில் ஊடுருவ வாய்ப்பாகும். மூன்று வர்க்கத்து மக்களிலும் அறிவாளிகளும் உண்டு. முட்டாள்களும் உண்டு. முட்டாள்கள் ஏமாறலாம். அறிவாளிகள்....? அவர்கள் சிந்திக்க மறுக்கிறார்கள். சிந்தை மழுங்குமளவு மனதில் மக்குத்தனம் வந்துவிட்டதா? இவர்களுக்கு?

நடவடிக்கையைப் பார்த்து விட்டு கருத்து மட்டும் சொல்லிவிட்டு வீட்டொடு பேசாமல் இருப்பது நம் நாட்டில் மட்டுமல்ல உலகம் முழுவதும் உள்ள ஒரு மனப்பான்மை தான். இதில் குறைந்த வீதமானவர் இப்படியானவர்களிடமிருந்து முரண்பட்டு சமூக பார்வையுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

சிலர் எவருடனும் ஒத்துப் போகமாட்டார்கள். முரண்படுதலே அவர்களது வாழ்வாகி விடுகின்றது. பலரோடு கூடி முடிவெடுக்கும் திறன் இவர்களது அறிவுத் தனத்தை பாதிக்கிறது என்பதா? அல்லது அவர்களின் தனித் தன்மை என்பதா?

–தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத் தாயே

சமாதான தாயே
சமாதான தாயே
எங்கே அம்மா
ஓடி ஒழிந்தாய்

பூமியம்மாவின்
குழந்தைகள் நாம்
மானுடர் என்பது
எங்கள் பேராம்

எங்களுக்குள் ஏன்
கொடிய போராட்டம்
ஏனிந்த இரத்த
வெள்ள ஓட்டம்

கையிழந்து கால்
இழந்து கண்
இழந்து அவயங்கள்
இழந்து பொட்டிழந்து
பூவிழந்து வாழ்ந்தவிடம்

ஊர் குடி இழந்து
சுற்றம் இழந்து
போகாத திசைகளெல்லாம்
ஓடி ஓடி விட்டோமே
களைத்து போனோம் தாயே

கருணை என்பது
உனக்கு கிடையாதா
பூமியம்மாவிடம்
நீயேன் கோபமா?

உங்கள் கோபத்தை
மறந்து வாரும்
எங்கள் துயர்
வாரும் துடைக்க

எங்களால் இனி
வாழ முடியாது
உன்னால் முடியாது
போனால் தாயே...
பூமியம்மாவிடம் சொல்

பிரளயத்தை ஏற்படுத்தி
வான மண்டலத்திலிருந்து
பூமியை சிதறடித்து
விடுவேனென்று தாயே.

நாங்கள் மானுடர்கள்
மனிதம் புரியாமல்
எங்களுக்குள் ஏற்படுத்திக்
கொண்ட பிணக்குகள்
தான் காரணமென்பது
எமக்கு புரிந்தாலும்

சமாதான தாயே
பூமியம்மாவை அழைத்து வா
மானுட பண்பை
உணர்த்தி எங்களை
சரியான பாதையில்
உயிர் உள்ளவரை
வாழ வை தாயே.

சமாதான தாயே
எங்கேயம்மா
ஓடி ஒளிந்தாய்?

– ஆலன் –


- மானுடம் சிற்றிதழ்
- முகவரி:- மானுடம் 172, பிரதான வீதி, திருகோணமலை.
- அச்சு: அஸ்ரா அச்சகம், திருக்கோணமலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல் இலக்கியம்

முதல் தமிழ் நாவல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்'. அது சமூக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதுதான் என்றாலும், அதை முழுமையான உருவம் பெற்ற நாவலாகக் கொள்ள முடியாது என்பது பல அறிஞர்களின் கருத்து. காரணம், நகைச்சுவை மிகுந்த பல சம்பவங்களின் தொகுப்பாக அந்நூல் இருப்பதுதான்.



அடுத்து வந்த "கமலாம்பாள் சரித்திரம்" பி.ஆர். ராஜம் அய்யர் எழுதியது. அது பாத்திரப் படைப்பிலும், கதையம்சத்திலும் சிறந்து விளங்குவதனால் அந்த நாளில் இலக்கிய உலகில் தனி இடம் பெற்றுவிட்டது. மேலும், அது தற்காலத்து கடும் விமர்சகர்களால் கூடச் சிறந்த நாவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் முக்கிய பாத்திரங்களான கமலாம்பாளும், தமிழ்ப் பண்டிதர் ஆடுசாபட்டி அம்மைப்பிள்ளையும் சாகாவரம் பெற்றுச் சிரஞ்சீவிப் பாத்திரங்களாக இன்றும் விளங்குகின்றனர்.

ராஜம் அய்யர் பிறந்த ஊர் வத்தல குண்டில். அவர் "கமலாம்பாள் சரித்திர"த்தை எழுதியபோது அவருக்கு வயது இருபத்தொன்று. இன்றைக்கு இருப்பது போல் லட்சக் கணக்கில் தமிழ் வாசகர்கள் இல்லாத காலம். தமிழுக்கு இத்துணை ஏற்றமும், சீரும், சிறப்பும் ஏற்படாத காலம். அந்தக் காலத்தில் அந்நாவலுக்கு நல்ல வரவேற்பு இருந்ததற்குக் காரணம் அது ஓர் இணையற்ற கலைப்படைப்பாக திகழ்ந்ததுதான். மேலும் அய்யர் அவர்கள் இன்றைய நடப்பியல் படைப்புகளில் காணப்படும் பல உத்திகளைத் தம் நாவலில் விசேஷமாகக் கையாண்டிருக்கிறார். தம்மைச் சுற்றியிருந்த மக்களின் சூழ்நிலையிலிருந்தே தம் நாவலைப் படைத்திருக்கிறார். மனிதர்களின் குணாதிசயங்களையும், மனித உள்ளங்களின் விசித்திரமான இயக்கங்களையும் அதியற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

உலகில் யதார்த்தமான அன்பு ஒன்றுதான் சாசுவதமானது. மனித உள்ளங்களை ஒன்று சேர்ப்பதே அந்த அன்பு ஒன்றுதான். ஏன், மனிதனை மனிதனாக்குவதே அன்புதான். ஆனால், அந்த அன்பை விதியும், மனிதனும் ஓயாமல் வேட்டையாடிக் கொண்டிருப்பார்கள். இது உலகில் எப்பொழுதும் நிகழ்ந்த வண்ணமாயிருக்கிறது - இதுதான் கமலாம்பாள் சரித்திரத்தின் அடிப்படைக் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கமலாம்பாள் சரித்திர"த்துக்கு இன்னொரு தனிச் சிறப்பு உண்டு. 1893ம் ஆண்டில், "விவேகசிந்தாமணி" என்ற தமிழ் மாதப் பத்திரிகையில் தொடர்கதையாக வெளிவந்தது! ஆகவே அதுதான் தமிழில் முதல் தொடர்கதை!

மதுரையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்புவரையில் படித்த அய்யர் அவர்கள் சென்னைக்கு வந்து கிறிஸ்தவக் கல்லூரியில் படித்து பி.ஏ., பட்டம் பெற்று, சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். வழக்கறிஞராக முடியாமல் அவருக்கு ஏற்பட்ட தோல்விதான் தமிழ் இலக்கியத்துக்குப் பெரும் பேறாயிற்று. நாவல் பிறந்தது!

அய்யர் அவர்கள் காலத்திலேயே, அதாவது 1892ம் ஆண்டில் பிறந்த மாதவய்யா "பத்மாவதி சரித்திரம்" என்ற நாவலை எழுதி வெளியிட்டார். சமகாலத்து ஆசிரியர்களால் எழுதப்பட்ட இரண்டு நாவல்களும் இலக்கிய உலகில் தனி இடம் பெற்று விட்டன. ஏறத்தாழ அதே காலத்தில் தோன்றிய இன்னொரு தமிழ் நாவலையும் குறிப்பிட வேண்டும். அதுதான் "ஜடா வல்லவர்". வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதி எழுதியது. மேற்கூறிய இம்மூன்று நாவல்களும் ஆங்கில வாடையே இல்லாது, அசல் தமிழ் நாட்டுச் சூழ்நிலையையும், பண்பாடுகளையும், அடிப்படையாகக் கொண்டவை. என்ற சிறப்பையும் பூண்டிருந்தன.

"கமலாம்பாள் சரித்திரத்தை முடித்த பிறகு ராஜம் அய்யர் ஆன்மீக விஷயங்களில் தீவிரமாக ஈடுபடலானார். கற்பனைக் கருவூலமாக விளங்கி முற்றிலும் புதிய கற்பனையில் நாவல் எழுதிய அய்யரவர்கள், முதிர்ந்த வேதாந்தியாகவும் விளங்கினார். அக்காலத்தில் சென்னையில் நடைபெற்று வந்த "பிரும்ம வாதின்" என்ற ஆங்கில மாதப்பத்திரிகையில், தம் வேதாந்தக் கருத்துக்களை, தெள்ளத் தெளிந்த ஆங்கிலத்தில் விளக்கி எழுதலானார்.

பாரதத்தின் ஞான தீபமாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் நம் நாட்டு இளைஞர்களுக்குப் பயன்படும்படியாக ஆன்ம ஞானத்தின் அடிப்படையில் ஒரு பத்திரிகையை ஆங்கிலத்தில் நடத்த வேண்டும் என்று கருதினார். அய்யரின் கட்டுரைகளைப் படித்ததும், அவரையே தம் நோக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் 1896ம் ஆண்டு "பிரபுத்த பாரத" என்ற ஆங்கில மாதப் பத்திரிகையாக உருவெடுத்தது. ராஜம் அய்யரே அந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

"பிரபுத்த பாரத" பத்திரிகையின் முதல் இதழ் வெளிவந்த போது சுவாமி விவேகானந்தர் இங்கிலாந்தில் இருந்தார். அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட "பிரபுத்த பாரத"வின் முதல் இதழைப் பார்த்துப் பரவசம் அடைந்த சுவாமிஜி தமது பாராட்டுதலை அய்யயரவர்களுக்கு ஒரு கடிதத்தின் மூலம் தெரிவித்திருந்தார்.

இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை ஏற்றபிறகு இரண்டு ஆண்டுக் காலத்தில், ராஜம் அய்யர் தமிழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவதை விட்டு விட்டு ஆங்கிலத்தில் நிறையத் தத்துவக் கட்டுரைகள் எழுதலானார். தத்துவ அடிப்படையைக் கொண்ட "வாசுதேவ சாஸ்திரி" என்ற ஆங்கிலத் தொடர்கதையை எழுதினார். ஆனால் அது முற்றுப் பெறவில்லை. வேதாந்தக் கருத்துக்களை விளக்குவதற்கு ஏற்ற பாத்திரங்களை நவீனமான நகைச்சுவையோடு கையாண்டு இந்தக் கதையில் வெற்றி கண்டார். "பிரபுத்த பாரத" பத்திரிகையில் ஒவ்வோர் இதழிலும், ராஜம் அய்யரே பல புனைப் பெயர்களில் எழுதி நிரப்பிக் கொண்டிருந்தார் என்ற உண்மையைப் பத்திரிகையின் பிரசுர கர்த்தர்கள், அய்யரவர்கள் காலமானபோது குறிப்பிட்டிருந்தார்கள்.

சுமார் இரண்டாண்டு காலம் :பிரபுத்த பாரத" பத்திரிகையில் அய்யரவர்கள் எழுதிய கட்டுரைகளும், கதைகளும் பின்னால் "Ramblesin Vedanda" என்ற தலைப்பில் 900 பக்கங்கள் கொண்ட நூலாகத் தொகுக்கப்பட்டு வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்றது.

இளம் வயதிலேயே அய்யரின் மனம் பாரமார்த்திகத் துறையில் ஈடுபடலாயிற்று. பொங்கி வளர்ந்த தத்துவ வேட்கை அவரது இல்லற வேட்கையைத் தணித்துவிட்டது. ஒன்றிலும் ஒட்டாமல், மனைவியிடம் பேசுவதைக் கூட நிறுத்திவிட்டு, சதா தியானமும், மோனமுமாக இருந்த அய்யரவர்கள் தம் இருபத்தாறாவது வயதில் 1898ஆண்டு, மே மாதம், 13ம் தேதி இயற்கை எய்திவிட்டார். ராஜம் அய்யர் காலமானதும், "பிரபுத்த பாரத" நிறுத்தப்பட்டுவிட்டது.

அய்யர் அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சோகம் நிறைந்த, விந்தையான நிகழ்ச்சியை அவசியம் குறிப்பிட வேண்டும்.

"பிரபுத்த பாரத" பத்திரிகையில் "வேதாந்தம்" என்றும், "ராஜாதிராஜன் என்றும் ராஜம் அய்யர் எழுதிய இரண்டு கட்டுரைகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. அக்கால பிரிட்டிஷ் அரசு அக்கட்டுரைகளுக்காக அவர் மீது ராஜத் துவேஷக் குற்றம் சாட்டி பிடியாணை அனுப்பியது. மேற்படி கட்டுரைகளில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பரிகசித்து எழுதப்பட்டிருந்தது.

ராஜம் அய்யர் வீட்டுக்குப் போலீஸார் வந்தனர். ஆனால் வாரண்டை கொடுக்க முடியாமல் போலீஸார் தோல்வியடைந்தனர். ராஜம் அய்யர் இல்லை...... இரண்டு நாட்களுக்கு முன்பே காலமாகிவிட்டிருந்தார்!

வெளி வந்துவிட்டது.....
திருமலை சுந்தாவின்
நான்..
அவள்..
- 64 குறுங்கதைகள்
- 64 அனுபவங்கள்
- அனுபவித்து படியுங்கள்
- விலை ரூபாய் 200/- மட்டுமே
- இன்றே 'மானுடம்' முகவரியில் வாங்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org